<u>**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**</u>

<u>**அ.வ எண்: 26/2018 சண்முகையா (பிசா 1) தேதி: 04.08.2026.**</u>

<u>**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்திற்கு கிழக்கே எனக்கு உடமைப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த கிழக்கு பக்க உள்ள சொத்தை 10.07.2000 தேதியில் நான் கிரையமாக சுப்பையா வேளாளர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்து சுப்பையா வேளாளருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவர் கிரையம் வாங்கிய சுய சொத்தாகும். சுப்பையா வேளாளர் அந்த சொத்தை யாரிடம் இருந்து எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் அசல் ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சுப்பையா வேளாளர் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய போது அந்த சொத்து காலி மனையாகத்தான் இருந்தது. நான் கிரையம் வாங்கிய போது அந்த சொத்திற்கு மேற்கு பக்கம் வாதிகளின் வீடு இருந்தது என்றால் சரிதான். வாதி வீட்டின் கிழக்கு பக்க சுவர் யார் கட்டியது என்றால் பத்திரத்தில் அது பொது சுவர் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

<u>**குறுக்கு விசாரணை:**</u> வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.